بِسۡمِ اللّٰہِ الرَّحۡمٰنِ الرَّحِیۡمِ

**ஹஸ்ரத் ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ் (அய்யதஹுல்லாஹுத் தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ்) அவர்கள் 08/07/2022 அன்று U.K - இஸ்லாமாபாதிலுள்ள முபாரக் பள்ளிவாசலில் ஆற்றிய ஜுமுஆ பேருரையின் சுருக்கம்**

**ஹஸ்ரத் அபூபக்ர் சித்தீக் (ரலி) அவர்களைப் பற்றிய நற்குறிப்பு - தொடர் 25 அன்னார் தரப்பிலிருந்து அனுப்பப்பட்ட மகத்துவமிக்க போர்ப்படைகள் பற்றிய ஈமானுக்கு வலுவூட்டக்கூடிய சம்பவங்கள்**

أَشْهَدُ أَنْ لَّا إِلٰهَ إِلَّا اللّٰهُ وَحْدَهٗ لَا شَرِيْكَ لَهٗ وَأَشْهَدُ أَنَّ مُحَمَّدًا عَبْدُهٗ وَرَسُوْلُهٗ۔ أَمَّا بَعْدُ فَأَعُوْذُ بِاللّٰهِ مِنَ الشَّيْطٰنِ الرَّجِيْمِ۔

بِسۡمِ اللّٰہِ الرَّحۡمٰنِ الرَّحِیۡمِ ﴿۱﴾ اَلۡحَمۡدُ لِلّٰہِ رَبِّ الۡعٰلَمِیۡنَ ﴿۲﴾ الرَّحۡمٰنِ الرَّحِیۡمِ ﴿۳﴾ مٰلِکِ یَوۡمِ الدِّیۡنِ ﴿۴﴾ اِیَّاکَ نَعۡبُدُ وَ اِیَّاکَ نَسۡتَعِیۡنُ ﴿۵﴾ اِہۡدِنَا الصِّرَاطَ الۡمُسۡتَقِیۡمَ ﴿۶﴾ صِرَاطَ الَّذِیۡنَ اَنۡعَمۡتَ عَلَیۡہِمۡ ۬ۙ غَیۡرِ الۡمَغۡضُوۡبِ عَلَیۡہِمۡ وَ لَا الضَّآلِّیۡنَ ﴿۷﴾

ஹுஸூர் அன்வர் (அய்யதஹுல்லாஹ்) அவர்கள் ஹஸ்ரத் அபூபக்ர் ஸித்தீக் (ரலி) அவர்களது காலத்தில், முர்த்ததான கிளர்ச்சியாளர்களுக்கு எதிரான படைகள் பற்றிய குறிப்புகளின் தொடர்ச்சியாக, **பதினொன்றாவது படை** பற்றிக் கூறினார்கள்:

ஹஸ்ரத் அபூபக்ர் ஸித்தீக் (ரலி) அவர்கள் ஒரு கொடியை **ஹஸ்ரத் முஹாஜிர் பின் அபீ உமய்யா (ரலி)** அவர்களிடம் கொடுத்தவாறு, 'அஸ்வது அன்ஸியின் படையை எதிர்த்துப் போரிடுங்கள். மேலும், கைஸ் பின் மக் ஷூஹ் மற்றும் ஏமன் வாசிகள் போர் தொடுக்க ஆயத்தமாக இருக்கும் அப்னாவுக்கு உதவுங்கள்' என்று கட்டளை இட்டார்கள். 'அங்கிருந்து விடுபட்டு கிந்தா கோத்திரத்துடன் போரிடுவதற்காக ஹிஸ்ர் மௌத் சென்று விடுங்கள்' என்ற வழிகாட்டலையும் வழங்கினார்கள்.

ஹஸ்ரத் முஹாஜிர் பின் அபீ உமய்யா (ரலி) அவர்கள் நம்பிக்கையாளர்களின் தாயார் ஹஸ்ரத் உம்மு சலமா (ரலி) அவர்களின் சகோதரர் ஆவார்கள். இவர்கள் தபுக் போரில் பின் தங்கி விட்டதனால் இவர்கள் மீது ஏற்பட்டிருந்த கோபம் விலகிய பிறகு, ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் இவர்களை கிந்தாவின் கவர்னராக நியமித்தார்கள். ஆனால், இவர்கள் நோயாளியாகி விட்டதனால், அங்கு செல்ல முடியவில்லை. எனவே, இவர்கள் ஹஸ்ரத் ஸியாது (ரலி) அவர்களுக்கு, தமக்காக தமது பணியையும் செய்யுமாறு எழுதினார்கள். பிற்காலத்தில் ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்கள் இவர்களை நஜ்ரானிலிருந்து ஏமனின் இறுதி எல்லை வரை கவர்னராக நியமித்தார்கள். மேலும், போரிட கட்டளையிட்டார்கள்.

புகாரியின் அறிவிப்பின் அடிப்படையில், ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களுக்குக் கனவில், 'இரண்டு பொய் நபித்துவ வாதிகள் (ஸன் ஆவைச் சேர்ந்த அஸ்வத் அன்ஸி, யமாமாவைச் சேர்ந்த முஸைலமா கத்தாப்) வெளிப்படுவார்கள்' என்று முன்னரே கூறப்பட்டு விட்டது.

ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் ஈரானிய மன்னன் கிஸ்ராவுக்கு இஸ்லாத்தின்பால் அழைப்புக் கடிதம் எழுதினார்கள். அவன் கோபத்தில் கொந்தளித்தவாறு தனக்குக் கீழ் இருந்த ஏமனின் கவர்னர் பாஸானுக்கு அந்த மனிதரின் (ஹஸ்ரத் ரஸூல்லாஹ் (ஸல்) அவர்களின்) தலையை எடுத்துக் கொண்டு அரசவையை வந்தடையுமாறு கட்டளையிட்டான். அவன் இரு நபர்களை ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களை நோக்கி அனுப்பி வைத்தான். ஆனால், ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள், **"என்னுடைய அல்லாஹ் என்னிடம், 'உங்களது மன்னனை அவனது மகன் ஷீரூயா கொன்று விட்டு, அவனது இடத்தில் தானே மன்னனாக அமர்ந்து கொண்டான்' என்று கூறியுள்ளான்"** எனக் கூறினார்கள்.

மேலும், அத்துடன் பாஸானுக்கு இஸ்லாத்தின் பால் அழைப்பு விடுத்தார்கள். அவன் இஸ்லாத்தை ஏற்றுக் கொண்டால் அவனை வழக்கம் போல் ஏமனின் கவர்னராக வைக்கப்படும் என்று கூறினார்கள். இதனைக் கேட்டுவிட்டு இருவரும் திரும்பிச் சென்று விட்டார்கள். பாஸானுக்கு எல்லா விஷயங்களையும் எடுத்துக் கூறினார்கள். மேலும், அதே சமயம் பாஸானுக்கு, அவ்வாறே நடந்தது என்ற தகவலும் கிடைத்து விட்டது. பாஸான் இந்த விஷயம் நிறைவேறக் கண்டதும் இஸ்லாத்தின் அழைப்பை ஏற்றுக் கொண்டான். மேலும் ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் அவனை ஏமனின் கவர்னராக நிலைத்திருக்கச் செய்தார்கள்.

பாஸான் மரணம் அடைந்த பிறகு, அச்சமயம் ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் தமது அமீர்களை ஏமனின் பல்வேறு பகுதிகளில் கவர்னர்களாக நியமித்தார்கள். ஏமனின் தெற்குப் பகுதியில் வசித்து வந்த அஸ்வத் என்னும் மாந்திரீகன் மாந்திரீகம் மற்றும் கவிதை நடையான பேச்சால் மிக விரைவாக மக்களது கவனத்தை தன் பால் ஈர்த்துக் கொண்டான். மேலும் நபித்துவ வாதமும் புரிந்து விட்டான். இதனால் சாதாரண மற்றும் அறிவற்ற மக்கள் பெரும் எண்ணிக்கையில் அவனைச் சுற்றி ஒன்று கூடி விட்டனர். உண்மையில் அவன், 'ஏமன், ஏமன் வாசிகளுக்கு மட்டுமே' என்று முழக்கமும் இட்டான். எனவே, ஏமனின் மக்கள், சமுதாய பற்றின் இந்த முழக்கத்தால் பெரும் தாக்கத்திற்கு ஆளாகினர்.

*ஹுஸூர் (அய்யதஹுல்லாஹ்) அவர்கள் கூறினார்கள்:* இவ்வாறு முழக்கமிடுவது மிகவும் பழமையானது. இன்றும் இதுவே பயன் படுத்தப்படுகிறது. உலகில் பரவியுள்ள குழப்பத்திற்கு இதுவே காரணமாகும்.

கவலைக்கிடமான இந்தத் தகவல்கள் மதினாவை அடைந்த போது, ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் முஃதா போரின் ஷஹீதுகளுக்காகப் பழி தீர்ப்பதற்காகவும் வடக்கு பகுதியிலிருந்து வரும் தாக்குதல்களைத் தடுப்பதற்காகவும் ஹஸ்ரத் உஸாமா பின் ஸைத் (ரலி) அவர்களது படையை ஆயத்தப்படுத்துவதில் ஈடுபட்டிருந்தார்கள்.

ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் ஏமனின் தலைவர்களது பெயருக்கு, 'தங்கள் தரப்பிலிருந்து அஸ்வதோடு போரிடுவதைத் தொடருங்கள். உஸாமாவின் படை வெற்றி பெற்று திரும்பியதும் அது ஏமனை நோக்கி அனுப்பி வைக்கப்படும்' என்று தூதுச் செய்தி அனுப்பினார்கள்.

இதற்கிடையிலேயே, ஹிஸ்ர் மௌத் மற்றும் ஏமனின் முஸ்லிம்களுக்கு ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களது கடிதம் சென்றடைந்தது. அதில் அஸ்வத் அன்ஸியுடன் போர் புரிய கட்டளையிடப்பட்டிருந்தது. எனவே இதற்காக ஹஸ்ரத் முஆஸ் பின் ஜபல் (ரலி) அவர்கள் முன் நின்றார்கள். இதனால் முஸ்லிம்களது உள்ளம் வலுப்பெற்றது.

**ஜிஷ்னிஸ் (ஜுஷைஷ்) தைலமீ கூறுகிறார்கள்:** வபர் பின் யுஹன்னிஸ் (ரலி) அவர்கள் ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களது கடிதத்தை எடுத்துக் கொண்டு எங்களிடம் வந்தார்கள். அதில் அன்னார், 'நாங்கள் எங்களது மார்க்கத்தில் நிலைபெற்றிருக்க வேண்டும். போர் புரிதல் அல்லது திட்டம் வகுத்தல் மூலம் அஸ்வதுக்கு எதிராகப் போர் நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும். அன்னாரது தூதுச் செய்தியைத் தற்சமயம் இஸ்லாத்தில் உறுதியாக இருப்பவர்கள் மற்றும் மார்க்கத்திற்கு உதவும் எண்ணம் கொண்டிருக்கும் மக்களுக்கும் கொண்டு சேர்க்க வேண்டும்' என்று கட்டளையிட்டார்கள். நாங்கள் அவ்வாறு செயல்பட்டோம். ஆனால், அஸ்வதுக்கு எதிராக வெற்றி பெறுவது மிகவும் கடினமானதாகத் தென்பட்டது.

**ஜிஷ்னிஸ் தைலமீ கூறுகிறார்கள்:** "அஸ்வதுக்கும், அம்ரு பின் மஅதீ கர்பின் சகோதரியின் மகன் கைஸ் பின் அப்து யகூஸ் பின் மக் ஷூஹ்வுக்கும் இடையே சிறிது விரிசல் ஏற்பட்டிருப்பதாக எங்களுக்குத் தெரிய வந்தது. எனவே கைஸின் உயிருக்கு ஆபத்து என்று நாங்கள் கருதினோம். நாங்கள் அவனுக்கு இஸ்லாத்தின் பால் அழைப்பு விடுத்தோம். மேலும் ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களது தூதுச் செய்தியை எட்ட வைத்தோம். அப்போது நாங்கள் விண்ணில் இருந்து இறங்கி வந்துள்ளது போன்று அவன் உணர்ந்தான். எனவே, அவன் உடனடியாக நாங்கள் கூறியதை ஏற்றுக் கொண்டான். நாங்கள் மற்ற மக்களுக்கும் கடிதங்கள் எழுதினோம். பல்வேறு கோத்திரங்களின் தலைவர்களும் அஸ்வதுக்கு எதிராகப் போரிட ஆயத்தமாகி விட்டிருந்தனர். அதேபோன்று ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் நஜ்ரானின் அனைத்து மக்களுக்கும் அஸ்வதின் விவகாரம் தொடர்பாக எழுதினார்கள். அவர்கள் அன்னாரது பேச்சை ஏற்றுக் கொண்டார்கள். இந்த விஷயம் அஸ்வதுக்குத் தெரிய வந்ததும் அவனுக்குத் தனது அழிவு தென்பட ஆரம்பித்தது."

ஜிஷ்னிஸ் தைலமீக்கு ஒரு திட்டம் உதித்தது. அவர் அஸ்வதின் மனைவி ஆஸாதிடம் சென்றார். அஸ்வதின் கைகளால் அவளது முந்தைய கணவர் ஷஹ்ர் பின் பாஸானின் ஷஹாதத் நிகழ்ந்தது, அவளது குடும்பத்தின் மற்ற உறுப்பினர்களின் அழிவு மற்றும் குடும்பத்துக்கு ஏற்பட்ட இழிவு, அநீதி ஆகியவற்றை நினைவூட்டினார். மேலும் அவளிடம், அஸ்வதுக்கு எதிராகத் தமக்கு உதவுமாறு கேட்டார். அப்போது அவள் மிகவும் மகிழ்ச்சியுடன் ஆயத்தமாகி விட்டாள். இறுதியில் ஒரு முழுமையான திட்டத்துடனும் ஆஸாதின் ஒத்துழைப்புடனும் அஸ்வத் அன்ஸி ஓர் இரவு அவனது கோட்டையில் நுழைந்து கொல்லப்பட்டான். இவ்வாறாக இந்தக் குழப்பம் மூன்று மாதங்கள் வரை, மேலும் ஒரு கூற்றின் அடிப்படையில், சுமார் நான்கு மாதங்கள் வரை கொழுந்து விட்டு எரிந்த பிறகு தணிந்தது.

இதற்குப் பிறகு, ஸன்ஆவில் முன்னரைப் போன்றே முஸ்லிம்களின் ஆட்சி நிலைபெற்றது. ஆனால், ஏமனில் மீண்டும் ஒருமுறை கிளர்ச்சி தலை தூக்கியது. ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களது மரணத்தின் சர்ச்சை கிளம்பியதும், சீரடைந்த சூழ்நிலை மீண்டும் சீர்குலைந்து போனது. தகுதி படைத்த, உறுதியான எண்ணம் கொண்ட, சமுதாயத்தில் பேர் போன கைஸ் பின் அப்து யகூஸ் அச்சமயம் மீண்டும் இஸ்லாத்தின் மீதான விசுவாசத்திலிருந்து பின் வாங்கினான். ஏமனில் பாரசீகர்களின் ஆதிக்கம் அவனுக்கு எப்போதும் நெருடலாகவே இருந்தது. அதனை அழித்த பிறகு, அவன் அப்னாவின் செழிப்பு, அவர்களின் ஒற்றுமை மற்றும் பொருளாதார மேன்மையை மண்ணோடு மண்ணாக்க நாடினான்.

அவன் ஏற்கனவே ஒரு வெற்றிகரமான படைத்தளபதியாக இருந்தான். அவன் அஸ்வதின் ராணுவ தலைவர்களுடன் சூழ்ச்சியில் ஈடுபட்டான். அப்னாவை நாட்டில் இருந்து வெளியேற்ற திட்டம் தீட்டினான். ஃபைரூஸ் மற்றும் தாஸூயா ஆகிய இருவருடனும் தொடர்புகளை சீர்குலைத்தான். தாஸூயாவை ஏமாற்றி கொலை செய்து விட்டான். அதே சமயம் ஃபைரூஸ் மயிரிழையில் உயிர் தப்பினார். ஃபைரூஸ் ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்களுக்குத் தமது மற்றும் அப்னாவின் விசுவாசத்தைத் தெரிவித்து, 'எங்களுக்கு உதவுங்கள். நாங்கள் இஸ்லாத்துக்காக எல்லாவித தியாகங்களையும் செய்யத் தயாராக இருக்கின்றோம்' என்று கேட்டுக் கொண்டார்.

ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்களால் வடிவமைக்கப்பட்ட பதினோரு படைகளில் அனைத்திற்கும் இறுதியில், இவர்களின் (ஹஸ்ரத் முஹாஜிர் பின் அபீ உமய்யாவின்) படை மதீனா முனவ்வராவிலிருந்து ஏமனை நோக்கி புறப்பட்டது. வழியில் பல்வேறு கோத்திரத்தைச் சேர்ந்த மக்கள் இவர்களின் படையில் இணைந்து கொண்டார்கள். மேலும் இந்த மாபெரும்படை முன்னேறிச் சென்று கொண்டிருந்தது.

குத்பா ஸானியாவிற்கு முன் ஹுஸூர் அன்வர் (அய்யதஹுல்லாஹ்) அவர்கள் அம்ர் பின் மஃதீ கர்ப் மற்றும் கைஸ் பின் மக் ஷூஹ் கைது செய்யப்பட்டது, ஹஸ்ரத் அபூபக்ர் ஸித்தீக் (ரலி) அவர்களுக்கு முன் கொண்டு வரப்பட்டது, அவர்களிடம் கேட்கப்பட்ட விஷயங்கள், அவர்களை மன்னித்து விடுதலை செய்தது, அவர்களது கோத்திரத்திடம் ஒப்படைக்கப்பட்டது மற்றும் அவர்களை விடுதலை செய்ததன் விளைவால் எதிர்காலத்தில் ஏற்பட்ட தொலைதூர தாக்கங்கள் பற்றிய குறிப்புகளை எடுத்துரைத்தார்கள்.

اَلْحَمْدُ لِلّٰهِ نَحْمَدُهٗ وَنَسْتَعِيْنُهٗ وَنَسْتَغْفِرُهٗ وَنُؤْمِنُ بِهٖ وَنَتَوَكَّلُ عَلَيْهِ وَنَعُوْذُ بِاللّٰهِ مِنْ شُرُوْرِ اَنْفُسِنَا وَمِنْ سَيِّـٰاتِ اَعْمَالِنَا

مَن يَّهْدِهِ اللّٰهُ فَلَا مُضِلَّ لَهُ وَمَنْ يُّضْلِلْهُ فَلَا هَادِىَ لَهُ وَنَشْهَدُ اَنْ لَّا اِلٰهَ اِلَّا اللّٰهُ وَنَشْهَدُ اَنَّ مُحَمَّدًا عَبْدُهٗ وَرَسُوْلُهٗ، عِبَادَ اللّٰهِ

رَحِمَكُمُ اللّٰهُ اِنَّ اللّٰهَ يَأْمُرُ بِالْعَدْلِ وَالْاِحْسَانِ وَاِيْتَآءِ ذِى الْقُرْبٰى وَيَنْهٰى عَنِ الْفَحْشَآءِ وَالْمُنْكَرِ وَالْبَغْيِ يَعِظُكُمْ لَعَلَّكُمْ

تَذَكَّرُوْنَ اُذْكُرُوا اللّٰهَ يَذْكُرْكُمْ وَادْعُوْهُ يَسْتَجِبْ لَكُمْ وَلَذِكْرُ اللّٰهِ اَكْبَرُ۔

(தமிழாக்கம்: மவ்லவி சுல்தான் மைதீன்)